25 MAY 2023

## TAMILNADU POLLUTION CONTROL BOARD

**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR OBTAINING THE ENVIRONMENTAL CLEARANCE FROM MINISTRY OF ENVIRONMENT, FOREST & CLIMATE CHANGE BY M/s. ICHIPATTI ROUGH STONE & GRAVEL QUARRY-CLUSTER FOR THE PROPOSED QUARRY PROJECT OF 7.06.95 HECTARE LOCATED AT S.F. NOS. 197/1, 197/2, 197/10, 197/11, 201/2, 203/2, 204/3, 206/2, 203/4(P) & 207/1A(P), ICHIPATTI VILLAGE, PALLADAM TALUK, TIRUPPUR DISTRICT, HELD ON 27.04.2023 AT 11:30 AM IN THE COLLECTORATE (GDP HALL), GROUND FLOOR, PALLADAM ROAD, TIRUPPUR DISTRICT.**

**Project Name:**

The proposed project draft of M/s. Ichipatti Rough Stone & Gravel Quarry-Cluster consisting of S.F. Nos. 197/1, 197/2, 197/10, 197/11, 201/2, 203/2, 204/3, 206/2, 203/4(P) & 207/1A(P), Itchipatti Village, Palladam Taluk, Tiruppur District at an extent of 7.06.95 Ha.

**Present:**

| | | |
|---|---|---|
| 1 | Dr. S. Vineeth, I.A.S. | District Collector,<br>Tiruppur District,<br>Tiruppur |
| 2 | Er. V. Swaminathan | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruppur South |
| 3 | Er. G. SenthilKumar | Assistant Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruppur South |
| 4 | Er. C. Mathanakeerthi | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruppur South |
| 5 | Project Proponents | 1 No |
| 6 | Thiru. M. Saik Navash | EIA Consultant,<br>Geo Exploration and Mining Solution, Salem. |
| 7 | Public | 81 Nos. (Annexure - I enclosed) |

**The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tirupur South:**

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruppur (South) has stated that the public hearing meeting is going to be held today for M/s. Ichipatti Rough Stone and Gravel Cluster. As per the Environmental Impact Assessment Notification 2006 the public hearing meeting has been made compulsory for certain projects, accordingly it is mandatory to conduct public hearing for the quarries located in the clusters. This is not a grievance redressal meeting to any grievances of the public, and the public can express their views in favor or against in the meeting. The main purpose of this meeting is to record it and send it to the State Environmental Impact Assessment Authority, Chennai. The Environmental consultant was requested to present the technical presentation for the proposed cluster.

The Environmental Impact Assessment Project Consultant, Geo Exploration and Mining Solutions, Salem has welcomed the District Collector, The District Environmental Engineer, TNPC Board, Tiruppur South, Other District level Officers and the public. In the power point presentation, the existing 4 Quarries and 1 proposed quarry in the M/s. Ichipatti Rough Stone and Gravel Cluster details for which permission has been sought was presented. Further, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruppur South has requested the public to express their views in short verbally or to give written petition if it is elaborate.

The following public has expressed their view during the public hearing.

**1.Thiru. P. Eswaramurthy, Ichipatti**

There is no effects to the public and public property due to the establishment of this quarry. Therefore, requested to continue to be permitted for the establishment of the quarry.

**2.Thiru. S.Kumar, Ichipatti**

There is no damage to the nearby due to this quarry. Therefore, expressed grant license to continue the proposed rough stone quarry.

**3.Thiru. R. Ganesan, State Secretary, Tamil Nadu Weaver Industries Movement, Ichipatti:**

I am a weaver. The textile industry is increasingly declining and weaving workers are working in quarries for their change of livelihood. Therefore, he has represented that all workers and public will not be affected by this proposed quarry. Therefore, permission can be granted for this quarry.

**4. Thiru. Nachimathu, Ichipatti**

The proprietor of this quarry Thiru. Balakumar his father & his son dependent on this quarry. There is no damage by this quarry and no disturbance to the public so far. The quarries are operated since from my childhood. There is no objection for this quarry due to various reason and situations such objection/impact arised now. With this impact were would it end. However labors dependent on this quarry, construction workers, people belongs to government has to reach this quarry for operation. Where to go to other places because of that quarry livelihood should not get affected. At the same time they are dependent on the quarry from their ancestors period. Requesting District Collector to show good path to them.

**5.Thiru.S. Palanichamy, Ichipatti**

There is no damage because of this quarry. Since from his father and his grandfather period, this quarrying is carried out. Hence no damages and problems. Stated to grant permission.

**6.Thiru.R.Satheeskumar, State Secretary, Law Awareness Wing, TamilNadu Farmers Protection Association**

- In the land owned by HR&C located adjacent to the quarry soil is piled which is nearby S.F. No. 197 & 201 of Balakumar quarry. Requested to find out who has piled the soil.
- In S.F.No. 197/11, odai is located as per revenue records also distance criteria is not followed from the proposed stone quarry.
- The quarry located in S.F. No. 197 & 201 has not followed the regulations as per TamilNadu Minor and Mineral Rules, 1959 under section 36(1-A). The basic guidelines and rules within 300 m & 500 m distance is not followed. The easternside of the proposed quarry the industries and residences has not been accounted as per the above TamilNadu Minor and Mineral Rules, 1959.
- The existing quarry in S.F.No. 197 & 201 greenbelts and wire fencing were not established earlier. Also from this S.F. No. PAP canal located at a distance of 25 to 50 meters has been damaged and the quarry operations near the canal has been done to 150-200 feet depth.
- The tripsheet to cut the minerals from the quarry is to be recorded online and requested to State Environmental Impact Assessment Authority through this meeting.

**7.Tmt. Kalaiselvi, Kodangipalayam**

Large rocks are at kodangipalayam, ichipatti, permagoundanpalayam area are blasted and carried in this quarries over 200 acres. The danger for land tremors will

happen if further licenses are granted and public are not able to live is this situation. Permission are granted with false information that no residences are located nearby. We public if ask or enquire they stated license are obtained. We are affected by the mistakes of the officials. Therefore further quarries may not be granted permission.

**8. Tmt.Selvi, Kodangipalayam**

This area will become desert if further stone quarries licenses are granted and situation for land tremors exists. It is stated that panchayat will be developed because of this quarry. What development will it achieve. Therefore license shall not be granted to any quarry.

**9. Tmt. Balamani, Ichipatti**

No one is affected because of this VMT quarry. No disturbances for canals, quarries and pubic. Therefore license may be granted.

**10. Thiru.Balasubramaniam, Ichipatti**

This quarry is in operation for the past 60 years and I am registering there is no objection and opposition due to the operation of this quarry. No threats, nearby people are not affected. Operated as per the government rules only. All quarry owners contribution is there and public economy is growing. License has to be granted. Further stated, that public economy has to be raised.

**11. Thiru. Jeevanandam, Ichipatti**

There is no objection to grant license for this quarry. Hence necessary license may be granted. Our country is not developed state but developing state. Problems may occur for such industry. Earlier for the powerloom sound pollution problems has come. We are not affected by the quarry and hence license may be granted.

**12. Thiru.S. Eswaramurthy, Ichipatti**

Because of Balakumar Stone Quarry no one is affected. Hence requested to grant license.

**13.Thiru.M. Palanichamy, Ichipatti**

There is no problem in this nearby because of this stone quarry. Hence stated to grant license.

**14. Thiru.K.S. Natarajan, Kompakadu:**

This quarry is operated for many years and so far no damages to the public. So far no complaint/objections has arised. Goods are delivered to public and government. Hence District Collector may grant permission without any hesitation. Pandiyar canal is located nearby but not water is flowing and hence no issues therefore requested to grant

license to the quarry. That canal is not flowing with water and permission may be granted until water arise in this canal.

**15. Thiru.Mugilan, Coordinator, Tamil Nadu Environment Protection Movement**

- As per Tamil Nadu Minor and Mineral Rules, 1959 section 36 (1-A) quarries are rejected permission, if approved residences/plots are located within 300m. But residences are located within 200 meters.
- As per FMP & village map an odai is located in S.F. No. 197/11. If odai is located in the quarry how to operate the quarry and eastern side of the quarry, PAP canal is located. Quarries are to be operated beyond 25m from canal. But within 25 meters from the canal minerals have been excavated. Hence fine should be imposed for that.
- As per map in the easternside of the quarry in S.F. No. 196 two houses are located. In S.F.No. 195 a house is located. On the northernside of S.F.No. 197 ayyan temple is located. Karapparayan temple is located in S.F.No.192. But all these are hidden and the project is prepared. However Block Development Officer certificate alone is there.

**16.Thiru. Pushparaj, Ichipatti**

I am residing at Karumathampatti and doing construction work with 80 persons. It is expensive to bring stone from Karur. This industries is affected much cannot give employment. It will useful if quarry is located nearby. Hence requested to grant permission to quarry.

**17. Thiru. Paneerselvam, Somanur**

For the construction work of this area the stones are brought from Karur. Hence, becomes expensive. If the quarry is located nearby it will be useful. Hence, requested to grant permission.

**18. Tmt. Geethamani, Itchipatti.**

Due to the operation of this quarry no one is affected. Hence, license may be granted.

**19. Thiru. Kumar, Itchipatti.**

License to the quarry may be given. No environmental damage due to this quarry.

**20. Thiru. Ramesh, Itchipatti.**

I am working in this quarry for the past 20 years. No damages to anyone. No complaints. It is very difficult even for food since no work for past two years. The

crusher owner is giving Rs.1000/- per week and helping to sustain. Hence, to grant license to the quarry and to increase our living standards and requested with the gratitude.

**21. Thiru. R. Suresh, Rasagoundanpalayam**

It is stated that no problem with the quarry in this area. Public nearby don't say like that. Every day morning and evening water is sprinkled once. It gets dried in one hour. Even two wheelers cannot go. In Kodangipalayam Village all the gardens has been destroyed. There is no account for this. If quarries are more agricultural industry is affected. Establishing one quarry 100 gardens getting destroyed. For the development of two districts is it required to destroy two villages. If without Kodangipalayam how could Karanampattai could be. Hence, requested not to permit the quarries.

District Environmental Engineer, TNPC Board, Tiruppur South has requested the public to furnish written statement to the District Collector, Tiruppur District. Accordingly, the public and viewers submitted their views in written to the District Collector. The District Collector, Tiruppur after the public opinion stated that the public hearing in video recordings and statement given in written will be forwarded to State Environmental Impact Assessment Authority (SEIAA) and advised the quarry owners to provide green belts, fencing and to operate as per government rules. For the establishment of quarry the State Environmental Impact Assessment Authority (SEIAA) alone will take decision. Further, fund obtained from quarries green corridor will be established and necessary facilities to the villages around will be done.

After the public hearing District Environmental Engineer thanked the public and all on behalf of District Collector and Tamil Nadu Pollution Control Board.

The proceedings of the meeting recorded in CD and the representation received in the meeting is enclosed herewith.

19/5/23

District Environmental Engineer
TNPC Board, Tiruppur South

District Collector
Tiruppur District

Fresh NOC of the WRD be obtained before issuing EC.
Mining plan to be revised to ensure safety of the canal.
(PAP)

19/5/23

# தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

**27.04.2023 அன்று காலை 11.30 மணியளவில், திருப்பூர் மாவட்டம், பல்லடம் சாலையில் அமைந்துள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பொதுமக்கள் குறை தீர்க்கும் கூட்ட அரங்கத்தில் நடைபெற்ற தி/ள் இச்சிபட்டி சாதாரண கற்கள் மற்றும் கிராவல் குவாரி குழுமம் க.ச. எண். 197/1, 197/2, 197/10, 197/11, 201/2, 203/2, 204/3, 206/2, 203/4(P) & 207/1A(P), இச்சிப்பட்டி கிராமம், பல்லடம் வட்டம், திருப்பூர் மாவட்டம் திட்டத்திற்கான பொது மக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கை குறிப்புகள்.**

## திட்டத்தின் பெயர்

திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், க.ச. எண் 197/1, 197/2, 197/10, 197/11, 201/2, 203/2, 204/3, 206/2, 203/4(P) & 207/1A(P) இச்சிபட்டி கிராமத்தில் அமைந்துள்ள தி/ள். இச்சிபட்டி சாதாரண கற்கள் மற்றும் கிராவல் குவாரி குழுமம் நிறுவனத்தின் குவாரியின் பரப்பு 7.06:95 ஹெக்டர் திட்டத்தின் வரைவு.

## பங்கேற்றோர்

| | | |
|---|---|---|
| 1. | டாக்டர். சு. வினீத்<br>இந்திய ஆட்சிப் பணி. | மாவட்ட ஆட்சியர்,<br>திருப்பூர் மாவட்டம், திருப்பூர். |
| 2. | திரு. வ. சுவாமிநாதன் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருப்பூர் தெற்கு, பல்லடம், |
| 3. | திரு. க. செந்தில்குமார் | உதவி சுற்றுச்சுழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருப்பூர் தெற்கு, பல்லடம், |
| 4. | திருமதி.சீ. மதனகீர்த்தி | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருப்பூர் தெற்கு, பல்லடம், |
| 4. | திட்ட உரிமையாளர்கள் | 1 நபர். |
| 5. | திரு. எம். சாய்க் நவாஷ் | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆலோசகர்,<br>புவி ஆய்வு மற்றும் சுரங்க தீர்வு, சேலம்<br>மாவட்டம். |
| 6. | பொது மக்கள் | 81 நபர்கள். (இணைப்பு - I-ல் உள்ளபடி) |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பூர் தெற்கு

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பூர் (தெற்கு) அவர்கள் இச்சிபட்டி குழும சுரங்கங்கள் குறித்தான பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்தப்பட உள்ளது என்றும், 2006ஆம் ஆண்டின் சுற்றுசூழல் தாக்க அறிவிக்கையின்படி பொது மக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் குறிப்பிட்ட சில திட்டங்களுக்கு (Project) கட்டாயம் (Compulsory) ஆக்கப்பட்டுள்ளதால், அதன்படி குழுமத்தில் (Cluster) உள்ள குவாரிகளுக்கு இந்த கூட்டம் நடத்தப்பட வேண்டும் என்பது கட்டாயமாகும். (Mandatory) இது ஒரு குறைதீர்க்கும் கூட்டம் அல்ல என்றும், மக்களுடைய குறைகள் (Grievances) எதுவாக இருந்தாலும் பதில் சொல்லக்கூடிய கூட்டம் அல்ல என்றும், இந்த கூட்டத்தில் பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை ஆதரவாகவோ அல்லது எதிராகவோ தெரிவிக்கலாம் எனவும், அதை நாங்கள் பதிவு செய்து சுற்றுச்சூழல் தாக்க ஆணையர், சென்னைக்கு அனுப்புவது தான் இக்கூட்டத்தின் முக்கிய நோக்கம் என்றும் இந்த சுரங்கங்கள் குறித்தான தொழில் நுட்ப அறிவிக்கையை சுற்றுச்சூழல் ஆலோசகர் அவர்களை வழங்க கேட்டுக் கொண்டார்.

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு திட்ட ஆலோசகர், ஜியோ எக்ஸ்ப்ளோரேசன் மற்றும் மைனிங் சொல்யூசன், சேலம் அவர்கள் மாவட்ட ஆட்சியர், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், மாவட்ட அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர்களை வரவேற்று ஏற்கனவே செயல்பாட்டிலுள்ள நான்கு குவாரிகள் மற்றும் அனுமதி கோரப்பட்ட ஒரு குவாரி குறித்து ஒளிப்பட காட்சி மூலம் விளக்கம் அளித்தார். அதன் பின், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம், திருப்பூர் தெற்கு அவர்கள் பொதுமக்களிடம் தங்களது கருத்துக்களை சுருக்கமாக இருப்பின் வாய்மொழியாகவும் விரிவாக இருப்பின் எழுத்துப்பூர்வமாக்வும் தெரிவிக்கலாம் என அறிவித்தார்.

கூட்டத்தில் பேசிய பொது மக்களின் கருத்துகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. **திரு. P. ஈஸ்வரமூர்த்தி, இச்சிபட்டி.**

இந்த கல்குவாரி அமைவதால் பொதுமக்களுக்கு மற்றும் பொது சொத்துக்கு எவ்விதமான பாதிப்பும் இல்லை. ஆகையால், கல்குவாரிக்கு தொடர்ந்து அனுமதி வழங்கலாம் என்று எனது கருத்தை பதிவு செய்கிறேன் என தெரிவித்தார்.

2. திரு. S. குமார், இச்சிபட்டி.

இந்த கல்குவாரியால் பக்கத்தில் எந்த பாதிப்பும் கிடையாது. ஆகையால், கல்குவாரிக்கு தொடர்ந்து அனுமதி வழங்கலாம் என்று தெரிவித்தார்.

3. திரு. R. கணேசன், மாநில செயலாளர்,தமிழ்நாடு நெசவுத் தொழில்கள் இயக்கம், இச்சிபட்டி.

நான் நெசவுத் தொழிலாளி. நெசவுத் தொழில் அதிகளவில் நலிவடைந்து உள்ளது. நெசவுத் தொழிலாளர்கள் கல்குவாரிகளில் பணிபுரிந்து அவர்களின் வாழ்வாதாரத்தை மாற்றி அமைத்துக் கொண்டார்கள். அதனால், இக்கல்குவாரியால் அனைத்து தொழிலாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் எவ்விதமான பாதிப்பும் கிடையாது. ஆகையால், இக்கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று தெரிவித்தார்.

4. திரு. நாச்சிமுத்து, இச்சிபட்டி.

இந்த பாறைக்குழி உரிமையாளர் பாலகுமார், அவர் தகப்பனார் மற்றும் மகன் அனைவரும் இந்த குவாரியை சார்ந்து இருக்கிறார்கள். இந்த பாறைகுழி பொறுத்தவரை எவ்விதமான பாதிப்பு மற்றும் பொதுமக்களுக்கு இடையூறு இது வரை கிடையாது. எனது சிறுவயதிலிருந்து கல்குவாரிகள் இப்பகுதியில் நடைபெற்று வருகிறது. எங்கள் கிராமத்தை பொறுத்தவரை இக்கல்குவாரிக்கு எவ்விதமான ஆட்சேபணையும் இல்லை. பல்வேறு காரணங்களால் பல சூழ்நிலைகளில் இம்மாதிரி எதிர்ப்பு/ தாக்கம் தற்போது எழுந்துள்ளது. இவ்வாறு தாக்கம் ஏற்பட்டால் எங்கு சென்று முடியும் என்று தெரிவித்தார். இருப்பினும், இக்கல்குவாரி தொழிலை நம்பியுள்ள மறைமுக தொழிலாளர்கள், கட்டுமான தொழிலாளர்கள், அரசு சார்ந்தவர்கள் கல்குவாரி இருக்கும் இடத்தை தான் சென்று நடைபெற முடியும். மற்ற இடங்களில் எங்கு செல்ல முடியும். இக்குவாரியால் வாழ்வாதாரம் பாதிப்படையக்கூடாது, அதே சமயத்தில் இவர்கள் முன்னோர் காலத்திலிருந்து இக்கல்குவாரி தொழிலை நம்பி உள்ளனர். இவர்களுக்கு நல்வழி வழங்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியரிடம் கேட்டுக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

5. திரு. S. பழனிச்சாமி, இச்சிபட்டி.

இக்கல்குவாரியினால் எந்த ஒரு பாதிப்பும் இல்லை. அவர்களின் அப்பா, தாத்தா வாழ்ந்த காலத்திலிருந்து கல்குவாரி உடைத்து வருகின்றார்கள். ஆகையால், எவ்விதமான பாதிப்பு மற்றும் பிரச்சினைகள் இல்லை. அனுமதி வழங்கலாம் என்று தெரிவித்தார்.

6. திரு. R. சதீஸ்குமார், மாநில செயலாளர், சட்ட விழிப்புணர்வு அணி, தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கம்.

- க.ச.எண்.197 மற்றும் 201-இல் அமையவுள்ள பாலகுமாரன் கல்குவாரிக்கு அருகில் உள்ள புலத்தை ஒட்டி உள்ள அறநிலையத்துறைக்கு சொந்தமான நிலத்தில் மண் குவித்து வைத்துள்ளார்கள். அந்த மண்ணை கொட்டியவர்கள் யார் என்று கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- க.ச.எண்.197/11-இல் ஓடை உள்ளது என்பது வருவாய் துறை ஆவணங்கள் மூலம் அறியப்பட்டது. மற்றும் உத்தேசிக்கப்பட்ட கல்குவாரியிலிருந்து தொலை தூர நெறிமுறைகளை (Distance Cretaria) கடைபிடிக்கவில்லை.
- க.ச.எண்.197 மற்றும் 201-இல் அமையவுள்ள கல்குவாரியானது தமிழக கனிமம் மற்றும் சுரங்கம் விதி 1959-இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவு 36 (1-A) வரக்கூடிய நெறிமுறைகளை கடைபிடிக்கவில்லை. மற்றும் 300 மீட்டர் மற்றும் 500 மீட்டர் தொலைவில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை நெறிமுறைகள் மற்றும் விதிகள் பின்பற்றப்படவில்லை. இந்த கல்குவாரி அமையவுள்ள கிழக்கு பகுதியில் தொழிற்சாலைகள் மற்றும் குடியிருப்புகள் உள்ளனவை கணக்கில் கொண்டுவரவில்லை என்று மேற்கூறிய தமிழக கனிமம் மற்றும் சுரங்கம் விதிகளின்படி அறியப்பட்டது.
- க.ச.எண்.197 மற்றும் 201-இல் புல எண்ணில் இக்கல்குவாரி ஏற்கனவே இருந்த நிலையில் பசுமை வளையங்கள் மற்றும் கம்பி வேலிகள் அமைக்கப்படவில்லை. மேலும், இப்புல எண்ணிலிருந்து 25 மீட்டர்/ 50 மீட்டர் அருகாமையில் பி.ஏ.பி. கால்வாய் இருந்த நிலையில் கால்வாய் உடைக்கப்பட்டு மற்றும் கால்வாய்க்கு அருகில் கல்குவாரி பணிகள் 150 முதல் 200 அடி ஆழம் வெட்டி எடுக்கப்பட்டு வருகிறது.
- கல்குவாரிகள் கனிமம் வெட்டி எடுக்க வழங்கப்படும் பயணத்தாள் (Trip Sheet) இணைய வழியில் பதிவு செய்யப்படவேண்டும் என்று இக்கருத்து கேட்புக் கூட்டத்தில் வாயிலாக SEIAA –விடம் கேட்டுக் கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

7. திருமதி கலைச்செல்வி, கோடாங்கிபாளையம்.

இந்த பாறைகள் அதிகமாக கோடாங்கிபாளையம், இச்சிபட்டி, பெருமாக்கவுண்டம் பாளையம் பகுதியில் அதிக அளவில் வெடி வைத்து கல்குவாரிகள் 200 ஏக்கருக்கு மேல் வெட்டி எடுக்கப்பட்டு வருகிறது. ஆகையால், இந்த கிராமங்களில் இதற்கு மேலும் அனுமதி அளித்தால் நில அதிர்வு ஏற்படும் அபாயம் உள்ளது. மற்றும்

மக்கள் வாழ முடியாத நிலைமை இருக்கிறது. அருகில் வீடுகள் இல்லை என்று பொய்யான தகவல் கொடுக்கப்பட்டு அனுமதி வழங்கி வருகின்றனர். பொதுமக்களாகிய நாங்கள் கேட்கும்பட்சத்தில் அனுமதி பெற்று விட்டோம் என்று கூறுகின்றனர். அதிகாரிகள் செய்யும் தவறுகளால் நாங்கள் பாதிப்புக்கு உள்ளாகிறோம். ஆகையால், இனிமேல் கல்குவாரிக்கு அனுமதி வழங்க வேண்டாம் என்று தெரிவித்தார்.

**8. திருமதி. செல்வி, கோடாங்கிபாளையம்.**

இதற்கு மேல் பாறைகுழிக்கு அனுமதி வழங்கினால், இப்பகுதி பாலைவனமாக மாறிவிடும் மற்றும் நில அதிர்வு ஏற்படும் சூழ்நிலையில் உள்ளது. இக்கல்குவாரியால் ஊராட்சிக்கு வளர்ச்சி அடையப் போகிறது என்று சொல்கிறார்கள். என்ன வளர்ச்சி அடையப்போகிறது. ஆகையால் எந்த கல்குழிக்கும் அனுமதி வழங்கக் கூடாது என்று தெரிவித்தார்.

**9. திருமதி. பாலாமணி, இச்சிபட்டி.**

இந்த வி.எம்.டி. கல்குவாரியால் யார் ஒருவருக்கும் எந்தவிதமான இடையூறுகளும் கிடையாது. வாய்க்காலுக்கும் கல்குவாரிகளுக்கும் எந்தவிதமான இடையூறும் இல்லை. பொதுமக்களுக்கும் இடையூறு இல்லை. அதனால், தாராளமாக கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று தெரிவித்தார்.

**10. திரு. பாலசுப்பிரமணியம், இச்சிபட்டி**

இக்கல்குவாரி கடந்த சுமார் 60 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. மற்றும் இக்கல்குவாரி செயல்படுவதால் எவ்விதமான எதிர்ப்பும் ஆட்சேபணையும் இல்லை என பதிவு செய்கிறேன் என்று தெரிவித்தார். அச்சுறுத்தல்கள் எதுவும் இல்லை. அருகிலுள்ளவர்களுக்கு எந்த பாதிப்பும் கிடையாது. அரசின் விதிகளுக்குட்பட்டு தான் செயல்பட்டு வருகிறது. எல்லா கல்குவாரி உரிமையாளர்களின் பங்களிப்பும் உள்ளது. மக்களின் வாழ்வாதாரம் வளர்ந்து வருகிறது. குவாரிக்கு அனுமதி வரணும், மக்களின் வாழ்வாதாரம் உயர வேண்டும் என தெரிவித்தார்.

**11. திரு. ஜீவானந்தம், இச்சிபட்டி.**

இக்கல்குவாரிக்கு அனுமதி வழங்குவதற்கு எவ்விதமான ஆட்சேபணையும் இல்லை. எனவே கண்டிப்பாக அனுமதி வழங்கலாம் என தெரிவித்தார். நம் நாடு வளர்ச்சியடைந்த நாடு இல்லை. வளர்ந்து வரும் நாடு. இந்த மாதிரி தொழில்களுக்கு பிரச்சினை வரத்தான் செய்யும். இதற்கு முன்பு விசைத்தறிக்கு ஒலி மாசு பிரச்சினைகள் வந்தது. கல்குவாரியினால் எங்களுக்கு எந்த விதமான பாதிப்பும் இல்லை. எனவே, குவாரிக்கு அனுமதி அளிக்கலாம்.

**12. திரு. S. ஈஸ்வரமூர்த்தி, இச்சிபட்டி.**

இந்த பாலகுமார் கல்குவாரியால் யாருக்கும் எந்த பாதிப்பும் இல்லை. எனவே, குவாரிக்கு தாராளமாக அனுமதி அளிக்கலாம் என கேட்டுக்கொண்டார்.

**13. திரு. M. பழனிச்சாமி, இச்சிபட்டி.**

இக்கல்குவாரியால் பக்கத்தில் எந்த பிரச்சினையும் இல்லை. எனவே, அனுமதி வழங்கலாம் என்று தெரிவித்தார்.

**14. திரு. K.S. நடராஜன், கோம்பக்காடு.**

இந்த கல்குவாரி பல ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. இதுவரை பொதுமக்களுக்கு பாதிப்பு எதுவும் இல்லை. இதுவரை புகார்களோ எதிர்ப்போ தெரிவிக்கப்படவில்லை. அரசுக்கும் பொதுமக்களுக்கும் பொருட்களை விநியோகித்துக் கொண்டு உள்ளனர். அதனால் மாவட்ட ஆட்சியர் எந்தவித முன்யோசனையும் இன்றி அனுமதி வழங்கலாம். அருகில் பாண்டியாறு வாய்க்கால் உள்ளது. ஆனால் வாய்க்காலில் தண்ணீர் வருவது இல்லை. அதனால் எந்த பாதிப்பும் கிடையாது. ஆகையால், கல்குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். அது தண்ணீர் வராத வாய்க்கால். எனவே, அவ்வாய்க்காலுக்கு தண்ணீர் வரும்வரை கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என தெரிவித்தார்.

**15. திரு. முகிலன், ஒருங்கிணைப்பாளர், தமிழக சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கம்.**

- தமிழக கனிமம் மற்றும் சுரங்கம் விதி 1959-இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவு 36 (1-A) இன்படி குவாரி அமையவுள்ள இடத்திலிருந்து 300 மீட்டருக்குள் அங்கீகரிக்கப்பட்ட வீடுகள் மற்றும் வீட்டு மனைகள் இருந்தால் அனுமதி மறுக்கப்படுகிறது. ஆனால், 200 மீட்டர் தொலைவில் வீடுகள் அமைந்துள்ளது.
- புல வரைபடம் மற்றும் கிராம வரைபடத்தின்படி க.ச.எண். 197/ 11இல் ஓடை உள்ளது. குவாரிக்குள் ஓடை இருந்தால் எப்படி குவாரியை இயக்குவது. குவாரிக்கு கிழபுறம் பி.ஏ.பி. கால்வாய் உள்ளது. கால்வாயிலிருந்து 25 மீட்டர் தொலைவிற்கு அப்பால் குவாரிகள் செயல்பட வேண்டும். ஆனால் கால்வாயை ஒட்டியே 25 மீட்டருக்குள் கனிமங்களை வெட்டியுள்ளனர். எனவே, அதற்கான அபராதம் விதிக்கப்பட வேண்டும்.
- வரைபடத்தின்படி குவாரிக்கு கிழபுறம் க.ச.எண்.196-இல் இரண்டு வீடுகள் உள்ளன. 195-இல் வீடு உள்ளது. 197-ற்கு வடபுறம் அய்யன்கோவில் உள்ளது. 192-இல் கருப்பராயன் கோவில் உள்ளது. ஆனால் இவைகள் அனைத்தும் மறைக்கப்பட்டு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், வட்டார வளர்ச்சி அலுவலர் சான்று மட்டும் உள்ளது.

16. திரு. புஷ்பராஜ், இச்சிபட்டி.

நான் கருமத்தம்பட்டியில் கட்டுமானத் தொழில் செய்து வருகிறேன். 80 நபர்களை கொண்டு தொழில் செய்து வருகிறேன். கரூரிலிருந்து கற்கள் எடுத்து வருவதால் செலவுகள் அதிகமாகின்றன. தொழில் அதிகளவில் பாதிப்படைந்துள்ளது. வேலை வாய்ப்பு கொடுக்க முடியவில்லை. கல்குவாரி அருகில் இருந்தால் மிகவும் பயனள்ளதாக இருக்கும். எனவே, இக்குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

17. திரு. பன்னீர்செல்வம், சோமனூர்

இப்பகுதியில் கட்டுமானப் பணிகளுக்கான பொருட்களை கரூரிலிருந்து கற்கள் எடுத்து வருவதால் செலவினங்கள் அதிகமாக இருக்கிறது. கல்குவாரி அருகில் இருந்தால் மிகவும் சௌகரியமாக இருக்கும். எனவே, அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

18. திருமதி. கீதாமணி, இச்சிபட்டி.

இக்கல்குவாரி இயங்குவதால் யாருக்கும் எந்த பாதிப்பும் இல்லை. தாராளமாக அனுமதி வழங்கலாம் என தெரிவித்தார்.

19. திரு. குமார், இச்சிபட்டி.

இக்கல்குவாரிக்கு அனுமதி அளிக்கலாம். இதனால் சுற்றுச்சூழலுக்கு எந்த பாதிப்பும் இல்லை என தெரிவித்தார்.

20 திரு. ரமேஷ், இச்சிபட்டி.

இந்த கிரசரில் நான் 20 வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். இதனால் யாருக்கும் எந்த பாதிப்பும் இல்லை. புகார்கள் எதுவும் இல்லை. கடந்த இரண்டு வருடங்களாக வேலை இல்லாததால் உணவிற்கே சிரமமாக உள்ளது. கிரசர் உரிமையாளர்தான் வாரம் ஆயிரம் ரூபாய் கொடுத்து உதவுகிறார். எனவே, இந்த குவாரிக்கு அனுமதி வழங்கி எங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்துமாறு நன்றியுடன் கேட்டுக் கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

21 திரு.R. சுரேஷ், ராசாக்கவுண்டன்பாளையம்.

இப்பகுதியில் குவாரியால் பிரச்சினை இல்லை என சொல்கிறார்கள். அருகிலுள்ள மக்கள் யாரும் அவ்வாறு கூறுவதில்லை. ஒருநாளைக்கு காலை மாலை என ஒரு முறை தண்ணீர் தெளிக்கிறார்கள். அது ஒரு மணி நேரத்தில் காய்ந்து போகிறது. இரு சக்கர வாகனத்தில் கூட செல்ல முடிவது இல்லை. கோடாங்கிபாளையம் கிராமத்தில் தோட்டங்கள் அனைத்தும் அழிந்து விட்டது. அதற்கு எந்த கணக்கும் இல்லை. கல்குவாரிகள் அதிகமானால் விவசாயத் தொழில்கள் பாதிப்படைகிறது. ஒரு கல்குவாரி அமைந்தால் 100 தோட்டங்கள் அழிகிறது. இரண்டு

மாவட்டங்கள் வளர்ச்சி அடைய வேண்டும் என்பதற்காக இரண்டு ஊர்கள் அழிய வேண்டுமா. கோடாங்கிபாளையம் இல்லையென்றால் காரணம்பேட்டை எப்படி இருக்கும். எனவே, கல்குவாரிகளுக்கு அனுமதி அளிக்க வேண்டாம் என கேட்டுக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்த பின் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பூர் (தெற்கு) அவர்கள் பொதுமக்களிடம் எழுத்து பூர்வமாக கருத்து தெரிவிப்பதாக இருந்தால் மாவட்ட ஆட்சியரிடம் நேரிடையாக தருமாறு கூறினார். அதனைத் தொடர்ந்து பொதுமக்கள் மற்றும் அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் தங்களது கருத்துக்களை எழுத்து பூர்வமாக மாவட்ட ஆட்சியரிடம் வழங்கினர்.

மாவட்ட ஆட்சியர், திருப்பூர் மாவட்டம் அவர்கள் மக்கள் கருத்துக்களை தெரிவித்த பின் இறுதியாக, பொதுமக்கள் தெரிவித்த கருத்துக்களை காணொளி வாயிலாகவும் மற்றும் எழுத்து பூர்வமாக பெற்ற கருத்துகள் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என்றும் மேற்படி குவாரி உரிமையாளரிடம் அனைத்து கல்குவாரிகளும் பசுமை வளையம் மற்றும் எல்லைக் கற்கள் அமைத்து அரசு விதிகளை பின்பற்றி இயங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். கல்குவாரி அமைவது பற்றி ஆணையம் தான் முடிவு எடுக்கும் என்றும் தெரிவித்தார். மேலும், இக்குவாரியினால் கிடைக்கப்பெறும் நிதியிலிருந்து பசுமை வளையம் (Green corridor) அமைக்கப்படும் என்றும் மற்றும் புவியியல் மற்றும் சுரங்க நிதியிலிருந்து இப்பகுதி சுற்றி அமைந்துள்ள கிராமங்களுக்கு தேவையான வசதிகள் செய்து தரப்படும் என்று கூறினார்.

பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்த பின், இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், மாவட்ட ஆட்சியர் மற்றும் தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம் சார்பாக கருத்து கேட்புக் கூட்டத்திற்கு வருகை புரிந்த பொதுமக்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

இக்கூட்டம் குறித்த பொதுமக்களின் எழுத்து பூர்வமான கருத்துக்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

கூட்ட நிகழ்வை காணொலி காட்சியாக "பதிவு செய்யப்பட்டு" குறுந்தகட்டில் பதிவு செய்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

19/5/23

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்
த மா க வாரியம், திருப்பூர் தெற்கு

மாவட்ட ஆட்சியர்
திருப்பூர் மாவட்டம்

8

PAP

19/5/23